நாமக்கல் மாவட்டம், அத்தனூர் பேரூராட்சி, ஆட்டையாம்பட்டி பிரிவில் ரூ.1.51 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் பெட்ரோல் விற்பனை நிலையத்தை திறந்து வைத்து, பணியின் போது உயிரிழந்த 25 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கி, 10 புதிய பேருந்துகளை பல்வேறு வழித்தடங்களை போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் எம்.எல்.ஏ பெ.ராமலிங்கம், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், போக்குவரத்துக் கழக அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம், முதலமைச்சரின் தொலைநோக்குத் திட்டங்கள், சட்டமன்ற அறிவிப்புகள் மற்றும் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் தொடர்பாக துறை சார்ந்த அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெய்பீம், வருவாய் கோட்டாட்சியர்கள் செந்தில் அரசன் (தாராபுரம்), ஜஸ்வந்த் கண்ணன் (உடுமலைப்பேட்டை), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) ஜெயசீலன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமை – நிறைவுரை!

‘நன்னன் குடி’ சார்பில் நூல் வெளியீடு - பரிசளிப்பு விழா!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் – நூலை வெளியிட்டு பரிசுகள் வழங்குகிறார்! சுப. வீரபாண்டியன் சிறப்புரை!

சென்னை, ஜூலை 30- நன்னன் குடி நடத்தும் - நூல் வெளியீட்டுடன் கூடிய பரிசளிப்பு விழா இன்று (30.7.2024-செவ்வாய்க்கிழமை) மாலை 6.00 மணி அளவில், சென்னை-இராசா அண்ணாமலைபுரம் - திருவாவடுதுறை டி.என்.இராஜரத்தினம் கலையரங்கில் நடைபெறுகிறது.

விழாவிற்கு, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள், விழாத் தலைமையேற்று நிறைவுரையாற்றுகிறார்.

போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நூல் வெளியிட்டு - பரிசுகள் வழங்கி - வாழ்த்துரை வழங்குகிறார்.

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் சிறப்புரையாற்றுகிறார்.

‘யாப்பு விளக்கம்’ எனும் நூலை யாத்த புலவர் ப. எழில்வாணன்,

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் துணைப் பொதுச் செயலர் தோழர் இரா.உமா, கவிஞர் கலைச் செல்வி புலியூர்க் கேசிகன் ஆகியோர் திறவுரையாற்றுகின்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு - திருப்பூரில்

க.முத்தம்மாள் - க.திலகமணி நினைவு கோப்பை அகில இந்திய ஓபன் ஒற்றையர் கேரம் போட்டி!

சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. - க.செல்வராஜ் எம்.எல்.ஏ. துவக்கி வைத்து பரிசுகள் வழங்கினர்!

திருப்பூர், ஜூலை 30- திருப்பூர் வடக்கு மாவட்ட மாணவர் அணி, முத்தம்மாள் அறக்கட்டளை சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு க.முத்தம்மாள் க.திலகமணி நினைவு கோப்பை ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலரும் கலந்து கொள்ளும் மாபெரும் அகில இந்திய ஓபன் ஒற்றையர் கேரம் போட்டியை (தும்பிங்) கழக மாணவர் அணி செயலாளர், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் ஆகியோர் துவக்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினர்.

திருப்பூர் வடக்கு மாவட்ட மாணவர் அணி மற்றும் முத்தம்மாள் அறக்கட்டளை சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு க.முத்தம்மாள் க.திலகமணி நினைவு கோப்பை ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலரும் கலந்து கொள்ளும் மாபெரும் அகில இந்திய ஓபன் ஒற்றையர் கேரம் போட்டி (தும்பிங்) 28.07.2024 - 29.07.2024 சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை அன்று திருப்பூர் பல்லடம் சாலை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் அமைந்துள்ள ராமசாமி முத்தம்மாள் திருமண மண்டபத்தில் பி.எஸ்.ஜி. கலை (ம) அறிவியல் கல்லூரி முன்னாள் சேர்மன்,

முத்தம்மாள் அறக்கட்டளை தலைவர் செ.திலகராஜ் தலைமையில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் து.கோபிநாத், தெற்கு மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் ம.அசோக்குமார் வரவேற்புரையில் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் க.அசோக் குமார், மு. கார்த்திகேயன், ஆர்.டி.என். விவேக், ஆர்.டேவிட் இளவரசன், ரேவதி அருள்பிரகாஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் ஆகியோர் போட்டிகளை துவக்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு முதல் பரிசாக முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவு கோப்பையும் ரூ.1,00,000மும், இரண்டாம் பரிசாக இனமான பேராசிரியரின் நினைவு கோப்பையும் ரூ.50,000 மும்,

மூன்றாம் பரிசாக க.முத்தம்மாள் நினைவுக் கோப்பையும் ரூ,25,000 மும், நான்காம் பரிசாக க.திலகமணி நினைவு கோப்பையும் ரூ.15,000 மும், கால் இறுதியில் வெற்றி வாய்ப்பு இலக்கு மணிக்கு தலா ரூ. 2000 மட்டும் சுழல் கோப்பை வழங்கினர். இதில் மாநகர கழக செயலாளர்கள் டி.கே.டி.நாகராசன், மாநகராட்சி மேயர் ந. தினேஷ்குமார், தமிழ்நாடு கேரம் சங்க தலைவர் எம். நாசர்கான் (எ) அமான், செயலாளர் மரிய இருதயம், மகாராஷ்டிரா கேரம் சங்க செயலாளர் அருண் கேதர், கழக மாணவர் அணி இணை செயலாளர் எஸ். மோகன், துணை செயலாளர்கள் வி.ஜி.கோகுல், மண்டல தலைவர்கள் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சி.கோவிந்த சாமி, தம்பி ஆர்.கோவிந்தராஜ், வெ.உமாமகேஸ்வரி,

கருவம்பாளையம் பகுதி கழக செயலாளர் மியாமி ஆ.அய்யப்பன், திருப்பூர் மாவட்ட கேரம் சங்க செயலாளர் எஸ்.சிவகுமார், உலக கேரம் சாம்பியன் எம். நடராஜ், கோவை மாவட்ட கேரம் சங்க செயலாளர் டி.ஜே.தங்ககுமார் உட்பட மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

ஒன்றிய பி.ஜே.பி. அரசின் நிதிநிலை அறிக்கைக்கு எதிராக

திருவாரூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது!

திருவாரூர், ஜூலை 30- திருவாரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் ஒன்றிய பி.ஜே.பி. அரசின் நிதிநிலை அறிக்கையைக் கண்டித்து மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்த ஆர்ப்பாட்டத்தில் பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் பங்கேற்றனர்.

ஒன்றிய பி.ஜே.பி. அரசு, 2024-25ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது. ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனால் சமர்ப்பிக்கப்பட்ட அந்த நிதிநிலை அறிக்கையில் தமிழ் நாட்டிற்கு என எந்த விதமான நிதி ஒதுக்கீட்டு அறிவிப்பும் வெளியிடப்படவில்லை. மேலும் வழக்கமாக ஒன்றிய பி.ஜே.பி. அரசு நிதிநிலை அறிக்கையின்போதுதிருக்குறளையோ அல்லது தமிழ்புராணங்களில் வரும் செய்திகளை மேற்கோள்காட்டி அறிவிப்பு செய்வது வழக்கம், ஆனால் இந்த முறை அது போன்ற எந்த சம்பிரதாயங்களும் கூட மேற்கொள்ளப்படவில்லை. மேலும் தமிழ் நாடு என்கிற வார்த்தையையே நிதிநிலை அறிக்கையில் பயன்படுத்தவில்லை.

தமிழையும் ,தமிழ் நாட்டையும், தமிழ் மக்களையும், புறக்கணித்த இந்த நிதி நிலை அறிக்கையை வன்மையாகக் கண்டித்த தமிழ் நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், மேலும் ஒன்றிய பி.ஜே.பி. அரசு சமர்ப்பித்து இருக்கும் இந்த நிதிநிலை அறிக்கை என்பது பி.ஜே.பி. மற்றும் அவற்றுடன் கூட்டணி வைத்திருக்கும் கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு மட்டுமே நிதிநிலை அறிக்கையாக தயாரிக்கப்பட்டுள்ளது என கடுமையான கண்டனங்களை தெரிவித்து இருந்தார்.

இந்த எதிர்ப்புகளை தமிழ்நாட்டு மக்கள் ஒன்றிய பி.ஜே.பி. அரசுக்கு எடுத்துக்காட்டும் வகையில் தமிழ்நாடு முழுவதும் உள்ள மாவட்ட தலைநகரங்களில் பிஜேபி அரசின் நிதி நிலை அறிக்கைக்கு எதிராக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. திருவாரூர் புகைவண்டி நிலையம் அருகே நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி. கே. கலைவாணன் தலைமை வகித்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கழக சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் பி. ராஜமாணிக்கம், மாவட்ட ஊராட்சி பெருந்தலைவர் தலையமங்கலம் ஜி.பாலு, துணைத்தலைவர் சேகர். கலியபெருமாள், மாநில இளைஞரணி துணை செயலாளர் நா.இளையராஜா மாநில மாணவரணி துணை செயலாளர் மன்னை.த. சோழராஜன், மாவட்ட அவைத்தலைவர் க.தன்ராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ். கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், சாந்தி பாஸ்கார், பொருளாளர் மு.வெங்கடேசன், ஒன்றிய பெருந்தலைவர்கள் புலிவலம்.ஏ. தேவா, சோம.செந்தமிழ் செல்வன், ஆர்.பாலச்சந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.எஸ். பாண்டியன், ப.ஆடலரசன், கோ.செல்வம், திட்டக்குழு உறுப்பினர் இரா.சங்கர், பொதுக்குழு உறுப்பினர்கள் செல்வ.ஜெயதேவன், டி.செந்தில், கலைவாணி மோகன், காஞ்சித்துரை, கமால், ஒன்றிய செயலாளர்கள் வீ.அன்பரசன், கோ. தெட்சிணாமூர்த்தி, எஸ். ஜோதிராமன், பா.பிரபாகரன், வே.மனோகரன், கேப்டன் செல்வராஜ், டி.எஸ்.டி.முத்துவேல்,நா. கவியரசு, கே.வி.கே. ஆனந்த், சித்ததேரி சிவா, வீ.எஸ்.ஆர்.தேவதாஸ், பால.ஞானவேல், இரா. மனோகரன், ப.பிரகாஷ், ஐ.வி.குமரேசன்.

நகரச் செயலாளர்கள் வாரை.எஸ்.பிரகாஷ், வீரா. கணேசன், பா.சிவநேசன், நன்னிலம் பக்கிரிசாமி, குடவாசல் ஏ.கே.டி.சேரன், எஸ்.வி.பக்கிரிசாமி, பேரளம் தியாகு, பூண்டி.கே. கலைவேந்தன், நகர்மன்ற தலைவர்கள் புவனப்ரியா செந்தில், பாத்திமா பஷீரா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பனங்குடி ஏ.எஸ்.குமார், மாணவரணி மாவட்ட அமைப்பாளர் பகலவன், சுற்றுசூழல் அணி மாவட்ட அமைப்பாளர் மீனாக்ஷி சூர்யபிரகாஷ், விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் எம்.என்.ராஜா, மகளிர் அணி மாவட்ட தலைவர் ராணி சேகர், அமைப்பாளர் ஷோபா கணேசன், விவசாய தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர் குன்னலூர் அன்பழகன் உள்ளிட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் கழக தோழர்கள், பொதுமக்கள், மகளிர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் என பல்லாயிரக் கணக்கானோர் பங்கேற்றனர்.

கடலூர் புகழேந்தி தலைமை! நிதி நிலை அறிக்கையில் தமிழகத்திற்கு நிதி ஒதுக்காமல் வஞ்சித்த

ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து நாகையில் ஆர்ப்பாட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் கண்டன உரை!

நாகை, ஜூலை 30- நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழகத்திற்கு எந்த ஒரு நிதியும் வழங்காமல் வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசை கண்டித்து நாகை அபிராமி அம்மன் திருவாசல் அருகே மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும், மாநில மாணவர் அணி முன்னாள் செயலாளருமான கடலூர் புகழேந்தி தலைமை தாங்கினார். நாகை நகரக் கழகச் செயலாளரும், நகர்மன்ற தலைவருமான இரா.மாரி முத்து வரவேற்றார். தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ். கே.வேதரத்தினம், கழக தீர்மானக் குழு உறுப்பினர் என்.வி.காமராஜ், மாவட்ட கழக அவைத்தலைவர் ப. செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் கண்டனஉரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.ராஜேந்திரன், ப.கோவிந்த ராசன், இல. மேகநாதன், க.மறைமலை, மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், துணை செயலாளர்கள் சோ.ரவிச்சந்தி ரன், ஆரூர்மணிவண்ணன், கற்பகம், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செல்வ.செங்குட்டுவன், ஆர்.டி.எஸ்.சரவணன், ஆ.தாஸ்ஆலவாஎடிசன், மகா.குமார், கே.பழனியப்பன், என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், சோ.பா. மலர்வண்ணன், சிக்கல் என்.ஆனந்த், நகரக் கழகச் செயலாளர்கள் மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி. மனோகரன், பேரூர் கழகச் செயலாளர்கள் கா.அட்சயலிங்கம், மரியசார்லஸ், சி. சுப்பரமணியன், முகமது சுல்தான், பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.பண்டியன், எஸ்.பன்னீர்செல்வம், எல்.எஸ்.ஈ.பழனியப்பன், கோசி.குமார், இல.பழனியப்பன், எஸ்.பி.டி.சார்லஸ், உமாசெந்தாமரை, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் இரா.முருகையன், பி.என்.கார்த்தி, ப.உதயகுமார், ஆர்.ஏ.அண்ணாதுரை, கேஸ்.வி.செந்தில், ஆர்.துரைராஜ், அ.பாரிபாலன், கே.எஸ்.சாகுல்ஹமீது, பி.முருகானந்தம், எஸ். வி.டி.அருள், சி.முகுந்தன், எஸ்.பால்ராஜ், ஆர்.ஆர். குலோத்துங்கன், க.சத்தியமூர்த்தி, இளம்.சுந்தர், எஸ். சந்தேஷ், ஆர்.சுரேந்தர், மு.தினேஷ்குமார், சி.கமல், எஸ்.பாலமுரளி, எஸ்வெற்றிச்செல்வன், த.தமயந்தி, எஸ்.புவனேஷ்வரி மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழகத்தினர் உள்ளிட்ட 4500க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

ஒலிம்பிக்கில் துப்பாக்கி சுடும் போட்டியில்

பதக்கம் வென்ற முதல் பெண் எனும் பெருமையைப் பெற்றார் மனு பாக்கர்!

புதுடெல்லி, ஜூலை 30– பாரிஸ் ஒலிம்பிக் 2024ல் பெண்களுக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் மனு பாக்கர் வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார். பாரிஸ் ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு கிடைத்த முதல் பதக்கம் இதுவாகும். 2012 லண்டன் ஒலிம்பிக் போட்டிக்குப் பிறகு துப்பாக்கி சுடுதலில் இந்தியாவுக்கு கிடைத்த முதல் ஒலிம்பிக் பதக்கமும் இதுவாகும்.

இதன் மூலம், கடந்த 20 ஆண்டுகளில் ஒலிம்பிக் துப்பாக்கி சுடும் போட்டியில் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய முதல் இந்திய துப்பாக்கி சுடும் வீராங்கனை என்ற பெருமையை மனு பாக்கர் பெற்றுள்ளார்.

ராஜ்யவர்தன் சிங் ரத்தோர் (2004 ஏதென்ஸ்), அபினவ் பிந்த்ரா (2008 பெய்ஜிங்), விஜய் குமார் (2012 லண்டன்) மற்றும் ககன் நரங் (2012 லண்டன்) ஆகியோருக்குப் பிறகு ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்ற ஐந்தாவது இந்திய துப்பாக்கி சுடும் வீரர் என்ற பெருமையை மனு பாக்கர் பெற்றார்.

ஒலிம்பிக்கில் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் மகளிர் இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்ற முதல் இந்தியப் பெண் என்ற பெருமையையும் அவர் பெற்றார்.

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் அவலூர்பேட்டை ஊராட்சியில் நடைபெற்ற “மக்களுடன் முதல்வர்” திட்டத்தை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்து பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றார். உடன் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் தமிழரசன்,ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், ஒன்றிய துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன் ஆகியோர் உள்ளனர்.

புதுச்சேரியில் – மாநிலத்திற்கு போதிய நிதி ஒதுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, பாண்டிச்சேரி தி.மு.க. சார்பில் மாநில அமைப்பாளர் இரா.சிவா எம்.எல்.ஏ. தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.